REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

# நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 20உ திங்கள் (5—9—55) ★ ★ வெளியீடு: ஆவணி 21உ செவ்வாய் (6—9—55) [இதழ் 71

## தாயகம் நுழைந்த புரட்சித் தலைவர் கைது!

நேபாளப் 'புரட்சித் தலைவ'ரான டாக்டர் கே ஐ சிங் தனது தொண்டர்கள் 17 பேர்களுடன் நேபாளத்திற்குள் காசேனகாசி எல்லை வழியாக நுழைந்துவிட்டார்.

சானகாண்டுசன் சிறையில் தஞ்சம் புகுந்திருந்த அவர், இப்போது நேபாள எல்லைக்குள் நுழைந்ததும், நேபாள இராணுவத்தினர் அவரையும், இதரர்களையும் கைது செய்தனர். பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் அவர் காட்மண்டு கொண்டுவரப்படுகிறார்.

மன்னர் மாளிகை அதிகாரிகள், டாக்டர் சிங்கை தழைத்து வரும் இராணுவ அதிகாரிகளுடன் தொடர்ந்து வானொலித் தொடர்பு கொண்டுள்ளனராம்.

# 'நான்காண்டுகளில் முழு சுதந்திரம் வேண்டும்'

## 'குடியேற்ற நாட்டு நிலையை ஏற்றுக்கொள்ள மாட்டோம்'

## 'கோரிக்கையை மறுத்தால் பதவியினின்றும் விலகுவோம்'

### மலேயா முதன் மந்திரி முழக்கம்

கோலாலம்பூர், செப். 4—

"மலாயாவிற்கு இரண்டு ஆண்டுகளில் சுய ஆட்சியும், நான்கு ஆண்டுகளுக்குள் பூரண சுதந்திரமும் தரவேண்டும் என்ற எங்கள் கோரிக்கையை பிரிட்டிஷ் சர்க்கார் ஏற்றுக்கொள்ளாவிட்டால், உடனடியாக எங்கள் மந்திரி சபை இராஜிநாமாச் செய்யும்; நாடெங்குமுள்ள சர்க்கார் அலுவலகங்கள் நிலை நின்று போகும்;

"நாங்கள் அம்மாதிரி வெளியேறுவது, எங்கள் கூட்டணியின் பெருவாரியாக உள்ள பெடரல் சட்ட மன்றத்தை மட்டுமின்றி, நகர மன்றங்களையும் பாதிக்கும்; உண்மையில், நாடெங்கிலும் ஒரு பொது 'சர்க்கார் வேலை நிறுத்தம்' நடைபெறும்; எங்களுடைய கோரிக்கைகளை, லண்டன் ஏற்குமென நம்புகிறேன்;

"சுயாட்சி வழங்கப்படும்போது, உள்நாட்டுப் பாதுகாப்பு, பொருளாதாரம் முதலியனவும் உள்ளடங்கியிருக்க வேண்டும்; மேலும், அரசியல் சட்டம் படிப்படியாகத் திருத்தப்பட்டு, முழுவதும் தேர்ந்தெடுக்கப்படுகிற ஒரு மக்கள் சபை அமைய வேண்டும்;

"சுதந்திரம் என்ற பெயரால், 'குடியேற்ற நாட்டு நிலை' வழங்கப்படுமானல், நாங்கள் அதனை ஏற்றுக்கொள்ள மாட்டோம்;

"உதாரணமாக, இந்தியா — இலங்கை இவற்றிற்குக் கிடைத்திருப்பதைப் போன்ற முழுச் சுதந்திரம் எங்களுக்கு வேண்டும்; நாங்கள் 'காமன்வெல்த்' கூட்டுறவில், சுதந்திர, சமஉரிமை பெற்ற பங்காளிகளாயிருப்போம்,"

என்று, மலேயா முக்கூட்டுக் கட்சித் தலைவரும், முதன் மந்திரியுமான, தெங்கு அப்துல் ரஹ்மான், பத்திரிகையாளரிடம் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவா விடுதலைப் போர்:

## அன்று அனுமதியும் ஆசியும்; இன்று 'தவறு' என்ற தத்துவ போதனை!

### அகில இந்திய காங்கிரசின் விசித்திரப் போக்கு!

புதுடில்லி, செப். 4—

"இந்தியர்கள் கோவா எல்லைக்குள் நுழைவது தவறான செய்கையாகும்; அதுவும் இப்போதுள்ள சூழ்நிலையில், தனிப்பட்டவர்கள் 'சத்தியாக்கிரகம்' செய்வதுகூட தவிர்க்கப்பட வேண்டும்;

"பெருவாரியான மக்கள், கோவாவிற்குள் 'சத்தியாக்கிரகம்' என்ற பெயரால் நுழைவது, விரும்பத்தகாத ஒன்றாகும்;

"கோவா பிரச்சினையை இந்தியாவின், தேசீய, அகில உலகக் கண்ணோட்டத்துடன் மக்கள் கவனிக்க வேண்டுமேயல்லாது, ஒரு கட்சி நோக்கு அடிப்படையில் அல்ல; இதில் எல்லோரும் இந்திய சர்க்காரின் கொள்கையை ஆதரிக்க வேண்டும்;

"இதிலிருந்து மாறுபட்ட எந்த ஒரு கொள்கையும், நடைமுறையும், சர்க்காரின் முடிவைப் பலவீனப் படுத்துவதுடன், கோவா விடுதலைக்கான முயற்சிகளையும் வலுவிழக்கச் செய்யும்"

என்று, இங்கு நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் கட்சிக் கூட்டத்தில், தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கடந்த ஜூலை 23-ந் தேதியன்று காங்கிரஸ் தலைமைச் செயற்குழு நிறைவேற்றிய தீர்மானம், காங்கிரஸ்காரர்களைத்தான் கோவா 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபடுவதைத் தடுத்தது—தனிப்பட்டவர்கள் ஈடுபடுவதைத் தடுக்கவில்லை; ஆனால், இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானம், காங்கிரஸ்காரர்களே அன்னியில், தனிப்பட்டவர், வேறு பல கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூட 'சத்தியாக்கிரக'த்தில் ஈடுபடுவதுகூடாது என்று காங்கிரஸ் கட்சி வேண்டுகிறது என்பதாக அமைந்துள்ளது.

## 'ஈவிரக்கமற்ற கொலைகாரன்'

### 'தேவி சிங்'கை ஒழிக்கத் தீவிர முயற்சி

லக்னோ, செப். 2—

தேவி சிங் என்ற மற்றொரு 'பிரபல' கொள்ளைக்காரனை ஒழிப்பதற்காக, உத்திரபிரதேசம்—விந்தியப் பிரதேசம்—மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களும் கூட்டாகத் திட்டமிட்டிருக்கின்றன.

இந்தக் கொள்ளைக்காரன் விந்தியப் பிரதேசத்தில்தான் அதிகமாக நடமாடுவதாகத் தெரிகிறது.

'ஈவிரக்கமற்ற பெரிய கொலைகாரன்—கொள்ளைக்காரன்' என்று இவனை, போலீசார் வர்ணிக்கின்றனர்.

விந்திய பிரதேச சட்டசபையில், கொள்ளைக்காரர்களுக்கு மன்னிப்பு வழங்கலாம் என்று தெரிவிக்கப்பட்ட யோசனையை முதன் மந்திரி நிராகரித்திருக்கிறார்.

## மேலும் வசதிகள் கோரி வடநாட்டு அகதிகள் ஆர்ப்பாட்டம்

### பத்து பேர் பட்டினிப் போர் தொடுத்திருக்கின்றனராம்

லாகூர், செப். 4—

பெஷாவர் நகரில் சுமார் 10 வடநாட்டு அகதிகள் கடந்த ஆக. 25-ந் தேதி முதல் பட்டினிப் போர் துவங்கி உள்ளனராம்; அவர்களில் இருவரது உடல்நிலை படுமோசமாகியுள்ளதாம்.

புனர்வாழ்வு பெறாத அகதிகளுக்குப் புனர்வாழ்வு தரவேண்டும்—கல்வி வசதிகள் வேண்டும்—அகதி மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம் தரப்படவேண்டும்—இலவச மருத்துவ வசதி வேண்டும்—அகதி புனரமைப்பு இலாகாவில் நிலவும் இலஞ்ச ஊழலை ஒழிக்கவேண்டும் என்பன, அவர்களின் கோரிக்கைகளில் சில.

தங்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை, தொடர்ந்து பட்டினிப்போரில் ஈடுபடப் போவதாக அவர்கள் அறிவித்திருக்கின்றனர்.

இதனை ஒட்டி, அகதிகள் பலர், அகதி புனரமைப்பு அதிகாரி அலுவலகத்தின் முன்பு கூடி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

## எதைக் காணவோ?

### ரஷ்யப் பிரதமர், 3 மன்னர்கள் இந்தியா வருகின்றனர்

மூன்று வார காலம் இந்தியாவில் தங்குவதற்கு ரஷ்யப் பிரதமர் மார்ஷல் புல்கானின் டிசம்பர் 3-வது வாரத்தில் இந்தியாவிற்கு வருவாராம்!

அதே பனிக்காலத்தில், சவூதி அரேபியா, ஈரான், எத்தியோப்பியா ஆகிய நாடுகளின் மன்னர்களும் இந்நாட்டிற்கு வருகை தருகின்றனராம்!

## ரூ. 148 இலட்சம் நஷ்ட ஈடு!

1954—55-ம் ஆண்டில் இரயில்வேயில் காணாமற்போன பொருட்களுக்கு நஷ்டஈடாக, ரூ. 1,48,17,000 தரப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் உதவி இரயில்வே மந்திரி தெரிவித்திருக்கிறார்.

## ரஷ்ய அணு இயந்திர ஆலை...

### இந்திய விஞ்ஞானிகள் பார்வையிட்டனர்

லண்டன், செப். 4—

டாக்டர் ஹோமி ஜே. பாபா தலைமையில் பிரபல இந்திய விஞ்ஞானிகள் அடங்கிய குழு ஒன்று, ரஷ்யாவில் உள்ள மிகப் பெரிய அணு இயந்திரசாலையைப் பார்வையிட்டிருக்கின்றனர்.

ஜெலிபாவ் என்ற ரஷ்ய விஞ்ஞானி, ஆலை முழுவதையும் சுற்றிக் காண்பித்துவிட்டு, குழுவினர் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விளக்கந்தந்திருக்கிறார்.

## புதுக் கட்சி பாசிசப் போக்கில் செல்லுமாம்!

### லோகியா மீது கிருபளானி கோஷ்டி பாய்ச்சல்!

காசி, செப். 3—

"டாக்டர் லோகியா துவங்கும் புதுக் கட்சி, ஒரு 'பாசிச'க் கட்சியாகவே இருக்கும்;

"அந்தக் கட்சியின் தலைமைப் பொறுப்பு ஒருவரிடத்திலேயே இருக்கும்; அவரும் ஜனநாயக ரீதியாக இயங்கமாட்டார்; ஏனெனில், அவர் வேறு ஒரு தலைவர் இருப்பதையே விரும்பாதவர்; கட்சியை தன்னிஷ்டப்படியே நடத்திச் செல்ல விரும்புபவர்.

"நான் டாக்டர் லோகியாவைப் போலன்றி, அவரது நாணயப் பொறுப்பில் நம்பிக்கை வைக்கிறேன்; ஆனால், 'தனது கருத்தை ஏற்றுக்கொள்ளாதவர்களெல்லாம், நாணயக் குறைவானவர்கள்' என்று டாக்டர் லோகியா கூறுவதை நான் நம்ப மாட்டேன்,"

என்று, ம. சோ. கட்சி தலைவரான ஜே பி. கிருபளானி, இங்கு நடைபெற்ற உத்திரப் பிரதேச ம சோ. கட்சி மாநாட்டுப் பிரதிநிதிகள் கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநாட்டில் பேசிய ஜெயப்பிரகாஷ் நாராயணன் குறிப்பிட்டதாவது:—

"நான் காணும் 'சோஷலிச' மாதிரி சமூகம், அதிகாரம் ஓரிடத்தில் குவிந்தின்றி பரவலாக இருக்கும் அடிப்படையில் அமைந்ததாகும்; அத்தகு ஒரு சமூகத்தில், ஆக்கவேலைகளை மக்களே நேரடியாக மேற்கொள்ஞர்—சர்க்காரை நம்பிக் கொண்டிருக்கமாட்டார்கள்."

டாக்டர் லோகியாவைப் பற்றிக் குறிப்பிடுகையில் ஜெயப்பிரகாஷ், 'டாக்டர் லோகியா ம. சோ. கட்சி தலைவர்கள் மீது வசைபாடும் இயக்கம் ஒன்றைத் துவக்கியிருக்கிறார்,' என்று கூறினர்.

## மருந்து தயாரிப்பதில் ஏற்பட்ட கவனக்குறைவு

## 735 மிருகங்களை பலிகொண்டது

### அதிகாரிகள்மீது நடவடிக்கை

பாடியாலா, செப். 4—

பெப்சு மாநில கால்நடை பராமரிப்பு இலாகாவின் கீழ் உள்ள உயிரின ஆராய்ச்சிக்கூடத்தைச் சேர்ந்த அதிகாரிகள், ஊழியர்கள் அத்தனை பேரும், தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிகிறது.

இவர்கள் மருந்து ஒன்றைத் தயாரிப்பதில் கவனக் குறைவாக நடந்து கொண்டதின் விளைவாக, அந்த மருந்துண்ட சுமார் 735 கால்நடைகள் மாண்டுபோயினவாம்

இந்தக் கால் நடைகள், பாட்டியாலாவில் உள்ள ஐந்து கிராமங்களைச் சேர்ந்தவை என்று கூறப்படுகிறது. தொடர்ந்து சர்க்கார் விசாரணையிலீடுபட்டிருக்கின்றனர்.

பல்வேறு கல்லூரிகள் வேலை செய்யும் விதம் பற்றி கண்டறிவதற்காக சென்னை சர்வகலாசாலை ஒரு குழுவை நியமித்திருக்கிறது.

## இராணுவத்தில் 47,000 பேர் குறைப்பு

போலந்து, உலக நெருக்கடியைத் தணிப்பதற்கு உதவும் நோக்குடன் தனது இராணுவத்தில் 47,000 பேர்களை இந்த டிசம்பர் 20-ந் தேதிக்குள் குறைத்துவிட முடிவு செய்திருப்பதாக அறிவித்துள்ளதாம்.

"இராணுவத்திலிருந்து விலக்கப்படும் சிப்பாய்களும், அதிகாரிகளும் தொழில், விவசாய வேலைகளில் ஈடுபடுத்தப்படுவர்," என்று, போலந்து சர்க்கார் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்-இரா. நெடுஞ்செழியன்
சென்னை 5—9—'55 திங்கள்

# 'தட்சிணப் பிரதேசம்'

நான்கு நாட்களுக்கு முன் சென்னை மேயர், மைசூர் முதலமைச்சர் அனுமந்தையா அவர்களை வரவேற்று உபசரித்திருக்கிறார். துளியும் பொருத்தமில்லாமல் எத்தனையோ பண்டாரங்களை வரவேற்று உபசரித்துப் பழக்கப்பட்டுள்ள சென்னை மேயர், மைசூர் முதலமைச்சரைப் பாராட்டி வரவேற்றுள்ளமையைப் பலரும் பாராட்டவே செய்வர்.

வரவேற்பில் மைசூர் முதலமைச்சரை முகத்துக்கு நேராகப் பலபட பாராட்டிப் புகழ்ந்ததுடன் நின்றுவிடாமல், சென்னை மேயர், ஒரு புதிய அரசியல் குண்டையும் தூக்கி எறிந்து இருக்கிறார். அதாவது மாநிலங்களை எப்படித் திருத்தி அமைப்பது என்பதில் ஏற்பட்டுள்ள கொந்தளிப்புக்கு ஏற்றதான ஒரு பரிகாரம் கூறும் முறையில் 'தட்சிணப்பிரதேசம்' என்ற ஒரு குறுக்கு வழியைக் காட்டி இருக்கிறார்.

தனது 'தட்சிணப் பிரதேச' ஏற்பாட்டிற்கு, தமிழ்—கன்னடம்—மலையாளம் ஆகிய மூன்று மொழிகளுக்கும் மூலத்தில் இருந்துவரும் அடிப்படை ஒற்றுமையை, வலிவுள்ள கடைக்காலாகக் கொண்டிருக்கிறார். அதே மொழி இன வழிவந்த ஆந்திர மொழியையும் ஒரு பொருட்டாக மதித்து, ஆந்திர மாநிலத்தையும் அவர் குறித்திடும் 'தட்சிணப் பிரதேச'த்துடன் இணைத்துக் கொள்ள வேண்டுமென, சென்னை மேயர் குறிப்பிடாமல் விட்டுவிட்டார்.

தாம் குறிப்பிட்டுள்ள 'தட்சிணப்பிரதேச' அமைப்பில் ஆந்திரத்தை அறவே மறந்து பேசி இருப்பது, ஏதோ மேயரின் கவனக் குறைவால் ஏற்பட்டுவிட்டது எனக் கூறுவதற்கில்லை. வேண்டுமென்றேதான் மேயர், தனது 'தட்சிணப் பிரதேச'த்தில் ஆந்திரத்திற்குரிய இடத்தை ஒதுக்க மறந்துவிட்டார் என்றே தீர்மானிக்க வேண்டியதாக இருக்கிறது.

மேயர் குறிப்பிடும் 'தட்சிணப் பிரதேசம்' இந்தியப் பேரரசுடன் எத்தகைய தொடர்பு கொண்டிருக்கும் என்பதற்கும் மேயர் விளக்கம் கூறி இருக்கவேண்டும். தமிழ் — கன்னடம் — மலையாளம் ஆகிய மூன்று மொழிகளுக்கும் உள்ள மூல ஒற்றுமையை அடிப்படையாகக் கொண்டு 'தட்சிணப் பிரதேசம்' அமைக்க வேண்டுமென விழையும் மேயர் அதே மொழி இனத்தில் உதித்த ஆந்திரத்தை வேண்டுமென்றே அலட்சியப்படுத்தி விட்டது போன்றே, 'தட்சிணப் பிரதேச'த்திற்கும் இந்தியப் பேரரசிற்கும் இருந்தவரவேண்டிய தொடர்பு பற்றிய விளக்கத்தையும் வேண்டுமென்றே இருட்டடிப்புச் செய்திருக்கிறார்.

மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையைத் தகர்ப்பதற்கு மேயரின் 'தட்சிணப் பிரதேச' ஏற்பாடு ஒரு மாற்று வாய்ப்பாக இருந்துவிடக் கூடுமோ என ஐயுறுவோடும் இருக்கவே செய்வர். அரசியல் காரணங்களுக்காக திரு—கொச்சியை சென்னை மாநிலத்துடன் ஒன்றுக்கிவிட வேண்டுமென காங்கிரஸ் மேலிடம் தீவிர முயற்சியில் ஈடுபட்டிருப்பதாக யூகிப்பதற்கு இடமிருக்கிறது. மாநில திருத்தக் குழு உறுப்பினர் மூவரில் ஒருவரான சர்தார் பணிக்கரின் உள்ளக் கிடக்கையே, மேற்குறித்துள்ள யூகிப்புக்குப் பலம் பொருந்திய அஸ்திவாரமாகும்.

இந்த இணைப்பு முயற்சிக்கும், மேயரின் 'தட்சிணப் பிரதேச' கருத்துக்கும் ஏதாவது நெருங்கிய தொடர்பு இருக்குமா என்றுகூட நாம் அஞ்சுகிறோம். காங்கிரஸ் மேலிடத்தாருடன் மேயர் போன்றவர்கள் அந்தரங்கமாகக் கலந்துறவாட முடியாது என்பது ஒப்புக்கொள்ளத்தக்கதே என ஏற்றுக்கொள்வதானாலும், தங்கள் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்ள மேயர் போன்றவர்களைக் கருவியாகப் பயன்படுத்துவது காங்கிரஸ் மேலிடத்தாருக்கு அதிகச் சிரமமில்லாமல் சாதித்துக்கொள்ளக் கூடியதேயாகும்; இதில் ஒருவருக்கும் ஆட்சேபணை இருக்க நியாயமில்லை.

தமது 'தட்சிணப் பிரதேச'த்துக்குரிய அதிகார அந்தஸ்தைத் திட்டவட்டமாகக் குறிப்பிடாத காரணத்தால், அது குறித்துக் கருத்தறிவித்த மைசூர் முதல் அமைச்சர் அனுமந்தையாவும் தெளிவில்லாமலே பேசியிருக்கிறார். இருந்தாலும் காங்கிரசின் நீண்டகால இலட்சியமான மொழிவழி மாநில அமைப்புக் கோரிக்கையைத் திட்டவட்டமாக வலியுறுத்தத் தவறிவிடவில்லை.

மேயரின் 'தட்சிணப் பிரதேச' கோரிக்கையில் அனுமந்தையாவிற்கு ஒரு ஐயமும் பிறந்திருக்கிறது. அந்த ஐயப்பாட்டைத் தனது நெஞ்சுக்குள் அனுமந்தையா மறைத்து வைத்துக் கொள்ளவுமில்லை.

'நாம் அனைவரும் ஒரே ஆட்சியின்கீழ், ஒரே நாட்டைச் சேர்ந்த ஒரே மக்களாக எண்ண வேண்டும்' என அனுமந்தையா அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். மேயரின் 'தட்சிணப் பிரதேச' அமைப்பு குறித்து மைசூர் முதலமைச்சருக்கு ஏற்பட்ட ஐயத்தின் காரணமாகத்தான், மேற்குறித்துள்ள உண்மையான அரசியல் நிலைமையைக் கூறியுள்ளார் எனக் கொள்ளுவதும் பொருத்தமுடையதேயாகும். அதையே வேறு ஒரு வகையில் பொருள் கொள்வதானாலும் அதுவும் பொருந்தக் கூடிய வகையிலே இருக்கிறது.

அதாவது, மொழிவழி மாநில அமைப்பானாலும், மேயரின் 'தட்சிணப் பிரதேச' அமைப்பானாலும், இந்தியப் பேரரசின் ஆதிக்கத்திற்குட்பட்டுத்தானே இருக்கப்போகிறது? எனவே அதிகாரமில்லாத ஏற்பாடு எதுவாக இருந்தால் என்ன என்ற பொருள் படும்படியாகத்தான் முதல் அமைச்சர் கூறியுள்ளார் எனக் கொள்வதானாலும், அதை உண்மைக்குப் புறம்பானது எனத் தள்ளிவிடுவதற்கில்லை. இவ்வகையில் முதலமைச்சர் அறிந்துள்ள அளவு சென்னை மேயர் அறிந்திருக்க மாட்டார் என முடிவு கட்டிவிடுவதும் தவறானதாகும்.

மேயரின் 'தட்சிணப் பிரதேச' கருத்துக்கு எது காரணமானாலும், அனுமந்தையாவின் மாறுபட்டக் கருத்துக்கு எது காரணமாக இருந்தாலும், இவ்விரு கருத்துக்களும் இந்தியப் பேரரசின் ஆதிக்கப் போக்கை மையமாகக்கொண்டு எழுந்துள்ளனவேயாகும் என்பது உண்மையிலும் உண்மையாகும். இத்தகு மோதுதல் அரசியல் துறையில் வரவேற்கத் தகுந்ததேயாகும் என்பதே நமது நம்பிக்கை.

## கடல்கொண்ட நகரைக் காண முயற்சி!

### ஒரு பெண்மணி உட்பட எழுவர் தகவல் சேகரிப்பர்

கி. பி. 243-ல் ஏற்பட்ட பூகம்பத்தினால் நீரில் மூழ்கிய 'சலாமி' நகரைப் பற்றி ஆராய ஓர் பிரிட்டிஷ் குழு சமீபத்தில் புறப்படும்.

சைப்ரசுக்கு அருகிலுள்ள ஓர் இடத்தில் 'சலாமி' நகரம் இருந்த சின்னங்கள் உள்ளன; அந்நகரம் மத்தியதரைக் கடலின் பிரதானத் துறைமுகங்களில் ஒன்றாக இருந்தது.

இந்தக் குழுவில் ஒரு பெண்மணி உட்பட எழுபேர் இருப்பார்கள்.

புராதனச் சின்ன ஆராய்ச்சியுடன், கரையோரப் பிராணிகளைப் பற்றியும், நீரில் மூழ்கியுள்ள பாறையை ஒட்டி வசிக்கும் ஒருவித மீனைப் பற்றியும் தகவல்களைச் சேகரிப்பார்கள். சுமார் ஐந்து மாதகாலம் இக்குழு சைப்ரசில் தங்கும்.

## மாணவர்களின் 'துணிச்சல்!'

### வட துருவப் பிரதேசத்தை ஆராய முனைவர்

பிரிட்டனைச் சேர்ந்த நாட்டிங்காம் சர்வகலாசாலை பிரதேச ஆராய்ச்சிக் கழகத்தைச் சேர்ந்த 6 மாணவர்கள் வடதுருவப் பிரதேச ஆராய்ச்சிக்காக அடுத்த ஜூலை மாதத்தில் புறப்படுகின்றனர்.

துருவ வட்டத்திலுள்ள ஸ்பிட்ஸ் பெர்கன் பிரதேசத்தில் மூன்று மாத காலம் தங்கி, பிரதேச ஆராய்ச்சி, பூகர்ப்ப ஆராய்ச்சி நடத்துவார்கள்.

கடற்படைக் கப்பல் ஒன்றில் அக்குழுவினர் பிரயாணம் செய்து, வடதுருவத்திற்கு 600 மைல்களிலுள்ள கிங்ஸ் விரிகுடாவில் இறங்குவர்; பிரிட்டிஷ் விமானப் படையும், சர்க்காரும், சாதன வசதிகளைச் செய்து உதவுகின்றன.

## சிறுவர்கள் பிச்சை எடுப்பதைத் தடுக்க முயற்சி?

"சிறுவர்கள் பிச்சை எடுப்பதையும், போக்கற்றவர்களாக மாறுவதையும் தடுக்கும் பிரச்சினை பற்றி அக்கரையுடனும், அவசரமாகவும் மாநில சர்க்கார்களுடன் மத்திய சர்க்கார் கலந்து ஆலோசிக்கும்," என்று, ராஜ்யங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

## உங்களுக்குத் தெரியுமா?

இந்திய சர்க்கார், சிறு தொழில்களின் அபிவிருத்திக்காக, பீகார், ஐதராபாத், மத்திய பாரத், ஒரிசா, பம்பாய், பெப்சு, இராஜஸ்தான் ஆகிய மாநிலங்களுக்கு சகாயத் தொகையாகவும் கடனுதவியாகவும் மொத்தம் சுமார் ரூ. 13 இலட்சம் வழங்கியிருக்கின்றனர்.

## 'நூல் நூற்றலும், கதர் அணிதலும் வாழ்வுக்குப் பயன் தராது'

### 'தபோவன' காலம் மலையேறிவிட்டது'

சர்தார் கே. எம். பணிக்கர் இடித்துரை

"மாநில புனரமைப்புக் குழு வேலையாக, இந்தியா முழுவதும் சுற்றும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்தது; அப்போது விந்தியப் பிரதேசத்தில் ஒருவர் என்னைச் சந்தித்தார்; அவர், 'இந்தியாவின் எதிர்காலம், ஒரு 'தபோவனங்களின் கூட்டாட்சி'யாக இருக்கும்—இருக்க வேண்டும்' என்று கருத்தறிவித்தார்;

"இன்று நாம், 'க்ஷேம நல' சமூகத்தை உருவாக்கி, மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக பெரும் தொழிற்சாலைகளை நிறுவ முயற்சி செய்து கொண்டிருக்கிறோம்; இந்த எண்ணங்களைக் கைவிட்டு, பின்னோக்கி 'தபோவன'த்திற்குச் செல்வதானால், முதலில் நாமெல்லோரும் நமது அரசியல் சுதந்திர எண்ணத்தைக் கைவிட வேண்டிவரும்;

"மனித சமூக நலனுக்குப் பொறுப்பாயிருக்கிற வாழ்க்கைக்கு இன்றியமையாத பொருள் துறை, தபோவனங்களின் அடிப்படையில் பெறுவதற்கு சாத்தியமானதாக இல்லை—அதுவும், மக்கள் தொகை வேகமாக வளர்ந்துவரும் இந்த நாட்களில்;

"'தபோவனத் தத்துவங்கள்' பல காலங்களிலும் பல உருவங்களில் நம்மிடையே இடம் பெற முயற்சிக்கின்றன;

"மக்கள், கிராமங்களுக்குச் சென்று நூல் நூற்க வேண்டும்—கதரையே அணிய வேண்டும் – இந்தியாவிற்கு புனர் வாழ்வு தரப்போவது கிராமத் தொழில்கள்தான் – என்று சொல்லும்போது, அவ்வாறு சொல்பவர்கள், அவர்களது கூற்றிலுள்ள சிக்கல்களைப் புரிந்துகொண்டார்களா என்பது தெரியவில்லை

"கிராம வாழ்க்கையை புனரமைத்தல், கிராம சுயதேவை பூர்த்தி என்பன போன்ற அடிப்படையில், தேசீயப் பிரச்சினைகளுக்கும், மக்களின் வாழ்வுக்கும் பரிகாரம் தேட நினைப்பது, தற்போதைய நிலையில் முடியாத காரியம்;

சமூக நலத் திட்டங்களைப் பற்றி எண்ணும்போது தனித் தனி கிராமங்கள் என்று அல்லாது—பல கூட்டமான கிராமங்களுக்கு என்றே நாம் எண்ணுகிறோம்; நகர மக்களின் வாழ்க்கை கிராமங்களுக்கும் கிடைக்க வேண்டுமென விரும்புகிறோம்; எளிய வாழ்க்கைக்கு உரிய இடம் கிராமம்—என்ற எண்ணம் மறைந்துவிட்டது; இந்தியாவெங்கணும் 'சேவா கிராமங்'களை ஏற்படுத்துவதென்பது சாத்தியமல்ல;

"எளிய கிராமங்களின், பொருளாதார, சமூக அமைப்பினையே இந்தியாவின் அடிப்படையாகக் கொள்ள வேண்டுமென்பது, நவீன இந்தியா செய்யும் 'மாபெருந் தவறு'களில் ஒன்றாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்."

—இவ்வாறு, சர்தார் பணிக்கர், 'நான் எதிர்நோக்கும் எதிர்கால இந்தியா' என்ற தலைப்பில், சென்னை – இராயப்பேட்டை கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"இந்தியாவெங்கணுமுள்ள பல பகுதிகளிலும் வேறுபாடுகள் பல இருக்கின்றன; என்றாலும், இந்திய கலாச்சாரம் ஒன்றேயாகும். ஒவ்வொரு பகுதியும், அந்த இந்திய கலாச்சார உருவாக்கத்திற்கு உதவியிருக்கின்றன; எனவே, ஒரு பகுதியைவிட எங்கள் பகுதி உயர்ந்தது என்று எவரும், உயர்வு பேசிக் கொள்வது கூடாது;

"இப்படி, 'உள்ளூர் தேசபக்தி' வளர்க்கப்படுமானால், அது இந்தியாவின் ஒற்றுமைக்கு அழிவு தேடித்தரும்;

"மேலும், அப்படிக் கூறிக் கொள்பவர்கள், இந்தியத் தாயின் உண்மையான மக்களாயிருக்கத் தகுதியற்றவர்கள்."

இப்படி எல்லாம் கூறிய அவரே, தனது உரையின் இடையே, "இந்திய சரித்திரம் எழுதுவதற்கு அடிப்படையாகத் தேவைப்படுகிற 'அரசியல் ஒற்றுமை' என்ற ஒன்று, ஒருபோதும் இந்தியாவில் இருக்கவில்லை' என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

## விஸ்வேஸ்வரய்யா

### 'பாரத் ரத்னு' பட்டம் பெறுகிறார்

புதுடில்லி, செப். 1—

மைசூர் மாநிலத்தின் பிரபல அரசியல் வாதியான எம். விஸ்வேஸ்வரய்யாவுக்கு, 'பாரத் ரத்னு' என்ற பட்டம் அளிக்கப்படவிருக்கிறது.

மேலும், சென்னை கவர்னர் பிரகாசாவின் தந்தை பாபு பகவன்தாஸ் என்பாருக்கும் இந்தப் பட்டம் தரப்படவிருக்கிறது.

கடந்த மாதத்தில் பண்டித நேருவுக்கும் இந்த 'பாரத் ரத்னு' பட்டம் தருவதாகத் தெரிவிக்கப் பட்டிருக்கிறது.

மூவருக்கும், இந்தப் பட்டம் வழங்கும் விழா, புதுடில்லியில் 'ராஷ்டிரபதி பவன'த்தில் நடைபெறும்; வரும் செப்டம்பர் 7-ந் தேதியன்று, இராசேந்திர பிரசாத் பட்டங்களை வழங்குவார்.

## உலகம் முழுவதுமே வெடித்து விடுமா?

### விஞ்ஞானியின் கவலை

"நீர்வளிக் குண்டுகளைவிட மிக சக்தி வாய்ந்த குண்டுகளைத் தொடர்ச்சியாக வெடிக்கச் செய்வதன் மூலம் உலகம் முழுமையுமே வெடித்துப் போகக்கூடிய நிலைமை ஏற்படுமா ?"—என்பதை ஆராய, சர்வதேச விஞ்ஞானிகள் கூட்டம் ஒன்று நடைபெற வேண்டுமென பிரிட்டிஷ் விஞ்ஞான அபிவிருத்தி சங்கத் தலைவர் தெரிவித்துள்ளார்.

"அணுகுண்டின் மூலம் நீர்வளிக் குண்டு பிறந்தது; நீர்வளிக் குண்டின் மூலம் சக்தி வாய்ந்த யுரேனியம் குண்டுகள் தோன்ற வழி ஏற்படக் கூடும்; இவற்றின் சக்தியை மேலும் அதிகரிக்கச் செய்வதற்கே விஞ்ஞானிகள் முயற்சிப்பர்; இதுபோன்ற முயற்சிகளில் இரகசியம் கூடாது என்பதற்கே சர்வதேச விஞ்ஞானிகள் கூட்டம் நடைபெறவேண்டுமெனக் கூறுகிறேன்; இம்முயற்சியில் ஈடுபடுவோர் சிறுதவறு செய்ய நேரிட்டாலும், அது எல்லோரையும் பொறுப்பாக்கிவிடும்."

## 10 இலட்சம் ஏக்கருக்கு அதிக நீர்ப்பாசனமாம்!

புதுடில்லி, செப். 2—

சமூக நலத் திட்டங்கள் துவக்கப்பட்டது முதல், இதுவரையில், 10 இலட்சம் ஏக்கராவுக்கு அதிகப்படியாக நீர்ப்பாசன வசதி அளிக்கப்பட்டுள்ளதாம்; இதற்கு ரூ. 3,93,00,000 செலவாகியுள்ளதாம்.

# தென்னாற்காடு மாவட்டத்தில் அண்ணா

## ‘இனியும் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கமாட்டோம்’

## ‘மக்களின்வாழ்க்கைஉயர்வுக்கான திட்டங்கள் மாநில மாநாட்டில் உருவாகும்’

### நிதி அளிப்புக்கு உழைத்த தோழர்களுக்குப் பாராட்டு

★

### சிறுமதுரை :

சிறுமதுரை கிளை தி. மு. கழகச் சார்பில், 30—8—55 மாலை 4-30 மணிக்கு பொதுக்கூட்டம் தோழர் தி நா. கோ. அண்ணாமலை தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் தில்லை-வில்லாளன், அ. பொன்னம்பலனார், எ. கோவிந்தசாமி, எம்எல்எ ஆகியோர், காங்கிரஸ் ஆட்சியில் மக்களிடையே நிலவும் பஞ்சமும், பட்டினியும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியவில்லைஎன்பதை எடுத்துக்காட்டி, வடவர் ஆதிக்கம்—வடவர் சுரண்டலில் சிக்கி நாடு அல்லல்படுவதுடன், அடக்குமுறை கொடுமைகளையும் மக்கள் அனுபவிக்கும் நிலைமையையும் விளக்கி விரிவுரையாற்றினர்.

இறுதியாக அண்ணா அவர்கட்கு மலர் மாலைகளும், கைத்தறி ஆடைகளும் பல கிளைகள் சார்பில் வழங்கப்பட்டன.

#### மாநில மாநாட்டுக்கு நிதி

மாநில மாநாட்டு நிதிக்காக சிறுமதுரை தி. மு. கழகச் சார்பில் ரூ. 200, பையூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் ரூ 10, சிறுமதுரை தோழர் கோபால்சாமி ரூ 5, கூடலூர் தோழர் எம் சீனிவாசன் ரூ 1, திருவெண்ணெய் நல்லூர் தோழர் வீரகுமாரு ரூ. 1, சிறுமதுரை தோழர் திருநாவு ரூ 1—ஆகமொத்தம் ரூ 218 அண்ணா அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

பின்னர் அண்ணா அவர்கள் திராவிடம் தனியாகப் பிரிந்தாலன்றி இந்நாட்டு மக்களுக்கு வாழ வசதி கிடைக்க முடியாதென்றும், சுதந்திரத் திராவிட குடியாட்சியிலேதான் மக்களின் வாழ்க்கைத் தரம் உயருவதற்குரிய திட்டங்கள் உருவாகுமென்றும் குறிப்பிட்டார்.

மேலும், வடவரின் ஓரவஞ்சனையால் திராவிடத்தின் செல்வங்கள் சீரழிந்து கிடப்பதையும், வடவர் சுரண்டலால் தென்னகம் தேய்ந்து வடக்கு வளமாகிச் செல்வதையும் எடுத்துக்காட்டி, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தை விளக்கினார்.

இனியும் தென்னாட்டு மக்கள் ஏமாற்றப்படுவதற்கு இடமளிக்கப்படாமல், உலக முன்னேற்றப் பாதையில் அவர்களும் அடியெடுத்து வைக்க தி. மு. கழகம் அரும்பணியாற்றி வருகிறதென்றும், திருச்சியில் நடைபெறப் போகும் மாநில மாநாட்டில் அதற்கான திட்டங்கள் தீட்டப்படுமென்றும், ஆகவே, மாநாட்டிற்கு அனைவரும் வருகை தந்து ஆதாவு தருமாறும் கேட்டுக்கொண்டார்.

### சிதம்பரம் :

சிதம்பரம் நகர் மண்டபத் திடலில் 30—8—55 மாலை 6 மணிக்கு நகர தி. மு. கழகக் கிளைச் சார்பில் நிதி அளிப்புப் பொதுக்கூட்டம் தோழர் பொன். சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

தோழர்கள் சிவநேசன், கிட்டப்பா, ஆர். பாலகுருசாமி, எஸ் முத்து ஆகியவர்கள் திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளையும், காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறைக் கொடுமைகளையும், வடவரின் அதிகார வெறியாட்டங்களையும் விளக்கிப் பேசினர்.

பின்னர், அண்ணா அவர்களுக்கு பல கிளைகள் சார்பில் மலர்மாலைகளும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டது.

#### மாநில மாநாட்டுக்கு நிதி

மாநிலமாநாட்டுநிதிக்கு வாக்களித்தத் தொகை ரூ 350-ல் வசூலான தொகை ரூ 200/ அண்ணா அவர்களிடம் கொடுத்து, பாக்கி ரூ. 150-யும் விரைவில் அனுப்பிவைப்பதாக தோழர் பொன்-சொக்கலிங்கம் வாக்குறுதி கூறினார்.

சிதம்பரம் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி மாணவர் மன்றம் (101 அணா) ரூ. 6-5-0; தோழர் மாணிக்கம் ரூ. 1; வள்ளுவர்புரம் தி மு. கழக தோழர்கள் 1—9—3; இடையக்கோட்டை திரு இரெ பா. அப்பன் ரூ 1 அளித்தனர்—இத்தொகைகளும் மாநில மாநாட்டு நிதியில் சேர்க்கப்பட்டது.

பின்னர், அண்ணா அவர்கள், ஐந்தாண்டுத்திட்டம் பற்றியும் வடவர் ஆதிக்கம் பற்றியும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :

“சிறு சிறு நாடுகளும், வளமற்ற நாடுகளும் தனியாக ஆட்சி நடத்தும் நிலைமையில், வளம் நிறைந்த-7 கோடிக்கு மேல் உழைப்பாளர்களைக் கொண்ட திராவிட மக்கள் மட்டும் ஏன் தனியாக வாழ முடியாது? பாகிஸ்தான் பிரியும் முன்னர், ‘நாடு பிரிவது கூடாது’ என்று கண்டனக் குரல் எழுப்பிய காங்கிரஸ்காரர்கள், இறுதியில், பாகிஸ்தான் கொடுக்கத்தான் செய்தார்கள்; எவராலும் இதை மறுக்க முடியவில்லை.

“திராவிட மக்கள்—நாடு ஆண்டவர்கள்; பிற நாட்டுக்குப் பல பொருள்களைக் கொண்டு சென்று வாணிபம் செய்தவர்கள்; வீரம் நிறைந்த மக்கள்; வெற்றி கண்ட மக்கள்; இத்துணை பண்பு கொண்ட மக்கள், தோல்வியே கண்ட வடவரிடம் அடிமைகளாக வாழ்வதை இனியும் எவ்வளவு காலத்திற்கு சகித்துக் கொண்டிருக்க முடியும்? தியாக உள்ளமும், நேர்மை உள்ளமும் கொண்ட காங்கிரசில் உள்ள தோழர்கள் இது பற்றி சிந்திக்கவேண்டும், மாநில மாநாட்டில் அவர்களும் கலந்துகொண்டு, தி. மு. கழகக் கொள்கைகளை ஆதரித்தோ, எதிர்த்தோ பேச வருமாறு அன்புடன் அழைக்கிறேன்.”

#### அறிவொளி மன்றம் திறப்பு விழா

30—8—55 இரவு 11 மணிக்கு, சிதம்பரம் வ. உ. சி. தெருவில் சிறவியுள்ள அறிவொளி மன்றத்தை அண்ணா அவர்கள் திறந்து வைத்து, தி. மு கழகக் கொடியை உயர்த்தினார். தோழர்கள் ஆர். சக்கிரவர்த்தி, பொன்-சொக்கலிங்கம் ஆகியோர் வரவேற்று மலர் மாலை சூட்டினர்கள்.

#### கொடியேற்றல்

சிதம்பரம் தி. மு. கழக வட்டக் குழு பணிமனை முன் தி. மு. கழகக் கொடியை தோழர் அ பொன்னம்பலனார் ஏற்றிவைத்தார்.

★

### திட்டக்குடி :

#### திருமணம்

திட்டக்குடி தோழர் ம. துரைசாமி—தோழியர் பழனி அம்மாள் திருமணம் 31—8—55 காலை 11 மணிக்கு தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. அண்ணா அவர்கள் மணமக்களைப் பாராட்டி வாழ்த்துரை வழங்கினார்.

#### ஊராட்சி மன்ற வரவேற்பு

31—8—55 மாலை 5½ மணிக்கு, திட்டக்குடி ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் பி. பழனியாண்டி அவர்கள் தலைமையில் துணைத் தலைவர் தோழர் பொ. வைத்தியநாதன் அண்ணா அவர்கட்கு ஊராட்சி மன்ற சார்பில் வரவேற்பு மடல் வாசித்துக் கொடுத்து, மலர்மாலைகள் சூட்டினார்.

மற்றும், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர் கே. ஆர். இராமசாமி ஆகியவர் கட்கும் மலர்மாலைகள் சூட்டினார்.

அண்ணா அவர்கள் ஊராட்சி மன்றத்தார் அன்புடன் அளித்த வரவேற்புக்கு நன்றி கூறினார். உபதலைவர் தோழர் பொ. வைத்திநாதன் நன்றி கூறினார். நிர்வாக அதிகாரி தோழர் கே. ஆர். குட்டியப்பன் யாவரையும் வரவேற்று உபசரித்தார். மாலையில் சிற்றுண்டி விருந்தும், நிழல் படம் பிடிக்கும் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

#### பொதுக்கூட்டம்

31—8—55 மாலை 6 மணிக்கு இவ்வூர் ஊராட்சி மன்றம் எதிரில் அமைக்கப்பட்ட மேடையில் தோழர் பி. பழனியாண்டி தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழர்கள் அ. பொன்னம்பலனார், எஸ். முத்து, கே. ஆர் இராமசாமி, பொதுச் செயலாளர் இரா நெடுஞ்செழியன், அண்ணா ஆகியவர்கள் திராவிட நாடு பிரியவேண்டியதின் அவசியம் குறித்து விளக்கியும், வடவர் ஆதிக்கம்—சுரண்டல் நீங்கிய திராவிட சமதர்மக் குடியரசு காண்பதே நம் இலட்சியம் என்பதைத் தெளிவாக்கியும், திராவிடம் சமூக—அரசியல்—பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் காணவும், அதற்காகப் பணியாற்றவும் மாற்றுக் கட்சித் தோழர்களை அழைத்தும், விடுதலை உரிமை ஆர்வம் கொண்டவர்கள் எல்லோரையும் திருச்சி மாநில மாநாட்டுக்கு வரும்படி கேட்டுக் கொண்டும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் கே ஆர். இராமசாமி அவாகள் ‘எங்கே சொர்க்கம்’ என்ற பாடலைப் பாடினார்.

#### மாநில மாநாட்டுக்கு நிதி

திட்டக்குடி தி. மு. கழகக் கிளைச் சார்பில் ரூ. 51; திரு மதுரைசாமி — பழனியம்மாள் திருமணத்தின் சார்பில் ரூ. 50;—ஆக ரூ. 101-ம் அண்ணா அவர்களிடம் வழங்கப்பட்டது.

இறுதியாக தென்னாற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள், இதுவரை கொடுக்கப்பட்டுள்ள மாநில மாநாட்டுத் தொகை ரூ 1,950-ம் நீங்க, மற்றுமுள்ள வரவுத் தொகையான ரூ 50-ஆக மொத்தம் ரூ. 2,000-மும், தென்னாற்காடு மாவட்டக் கழகச் சார்பில் அண்ணா அவர்களிடம் கொடுக்கப்பட்டுள்ளதென்று அறிவித்தார்.

அண்ணா அவர்கள், இம்மாவட்டம் வாக்களித்தபடி நிதியைச் சேர்த்துக் கொடுத்து, பொதுக் கூட்டங்களையும் நல்ல முறையில் ஏற்பாடு செய்து கொடுத்த செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்களுடைய முயற்சிகளையும், நல்ல உழைப்பையும் பாராட்டி, அவருக்குப் பேருதவியாக ஒத்துழைத்த கழகத் தோழர்கள் யாவரையும் பாராட்டி நன்றி கூறிக்கொண்டார்.

நிதி அளிக்க உதவி செய்து ஒத்துழைத்த யாவருக்கும், தி மு. கழகத் தோழர்கட்கும் நன்றி தெரிவித்துக் கொண்டார்.

இம்மாவட்டத்தில் மேலும் பல ஊர்களில் வாக்களித்திருப்பதை வசூல் செய்தால் ரூ. 1,000 வரையில் கிடைக்கக்கூடும் என்றும் தெரிவித்தார்.

#### மாநில மாநாட்டு நிதியில்...

விழுப்புரம் தி மு கழகப் பொதுக் கூட்டத்தில் மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்களிடமிருந்து ரூ. 225 வரப்பெற்றது. மாநில மாநாட்டு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

* * *

கடலூர் புதுநகர் சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டத்தில் திருச்செங்கோடு தோழர் என். பி. சதாசிவம் அவர்கள் கொடுத்த கருப்பு சிகப்பு கலர் போட்ட சமுக்காளம் ஒன்று ஏலம் விட்டதில் மதுரை தோழர் எஸ். முத்து அவர்கள் வாங்கிக் கொண்டு கொடுத்த ரூ. 10-ம், மேற்படி கூட்டத்தில் மாணவர் முன்னேற்றக் கழகம் 501 காலணா (ரூ. 7—13—3); ‘செங்குட்டுவன்’ பெயர் சூட்டல் ரூ 1—9—3; புதுப்பாளையம் தி. மு. கழகம் 0—12—9 ஆகியவைகளும் மாநில மாநாட்டு நிதியில் சேர்க்கப்பட்டுள்ளது.

* * *

நெல்லிக்குப்பம் செல்லும் வழியில் வரகால்பட்டு தி. மு. கழகச் சார்பில் தோழர் குப்புசாமி மூலம் வழங்கப்பட்ட ரூ. 2—3—9 நிதிக் கணக்கில் சேர்க்கப்பட்டது.

★

#### உபசரிப்பு

சிதம்பரம் செல்லும் வழியில் புவனகிரி, கீரப்பாளையம் தி. மு கழகத் தோழர்கள் அண்ணா அவர்கட்கு மலர் மாலைகளும் கைத்தறி துண்டுகளும் வழங்கினர்.

## தோழர் சுந்தரமூர்த்தி - தோழியர் சரசுவதி

21—8—55 காலை 10 மணிக்கு, அகரகடக்கத்தில், தோழர் கு. சுந்தரமூர்த்தி—தோழியர் சரசுவதி திருமணம், தோழர் தில்லை-வில்லாளன் தலைமையில் நடைபெற்றது மணமக்களை வாழ்த்தித் தோழர்கள் இராசாபாதர், பாலகுருசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இத்திருமண நினைவாக ‘நம் நாடு’ இதழுக்கு, ரூ 10 நன்கொடை அளிக்கப்பட்டது—வரப்பெற்றோம்-நன்றி-பொறுப்பாளர்.

## செய்திச் சுருள்

★

#### சேலம் மாவட்ட தீண்டாமை ஒழிப்பு சங்கம்

27—8—55 இரவு 7 மணி அளவில், சேலம் மாவட்டம் ஓமலூர் வட்டம் தீண்டாமை ஒழிப்புச் சங்கத்தின் நிர்வாகிகள், அமைப்புக் கூட்டம், கோட்டை ஆதிதிராவிடர் தெருவில், தோழர் கே. பி. சாமிதாசன் இல்லத்தில், தோழர் கே. சி. கிருட்டிணன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர்கள் கே முருகேசன், எம். இராமசாமி ஆகியோரை முறையே தலைவராகவும், செயலாளராகவும் கொண்ட நிர்வாகக் குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

பின்னர், விரைவிலேயே தீண்டாமை ஒழிப்பு மாநாட்டை நடத்துவதெனவும், அதற்கான ஆக்க வேலைகள் குறித்து ஆராய கூட்டம் ஒன்று நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

#### சென்னை அழகிரி நினைவு மன்றம்

28—8—55 காலை 9 மணியளவில், செயலாளர் இரா. சேரன் தலைமையில் ‘திராவிட நாகரீகமும் ஆரிய நாகரீகமும்’ எனும் பொருள் குறித்து தோழர்கள் மணிமொழி, ம. ப த. மணி, தீனதயாளன், து. கருமுகில் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

#### திரு.வி.க. பிறந்தநாள்விழா

14-8-55 காலை 7 மணியளவில் சென்னை, ஸ்ட்ரஹான்ஸ் ரோட், எண். 82 திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றச் சார்பில், தோழர் ஜி. முனுசாமி தலைமையில் நடைபெற்ற விழாக் கூட்டத்தில், தோழர்கள் கா. அப்பாதுரை, கண்ணபிரான் ஆகியோர் தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் செய்த தொண்டு பற்றி விரிவுரையாற்றினர். பகல் 12 மணிக்கு தோழர் சு. நல்லதம்பி முன்னிலையில் 500 ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டது. மாலை 6-மணி யளவில் திரு வி. க நிலையில் தோழர் சு. வரதன் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் டி. எம். சண்முகம், பி. சி. கல்யாணசுந்தரம், கண்ணதாசன், என். வி. நடராசன் ஆகியோர் திரு. வி. க. அவர்கள் தொழில் உலகத்துக்குச் செய்த தொண்டினைப் பாராட்டிப் பேசினர்.

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்களுக்கு தோழர் மு மாணிக்கம் அவர்களால் வரவேற்பு மடல் வாசித்தளிக்கப்பட்டது.

#### டி. ஐ. சைக்கிள் பாக்டரி தொழிலாளர் கூட்டம்

1-9-55 காலை 9 மணிக்கு, அம்பத்தூர் சைக்கிள் பாக்டரி புரொடக்‌ஷன் அதிகாரியின் போக்கைக் கண்டித்து பாக்டரியிலுள்ள எல்லா தொழிலாளர்களும்—மற்ற அதிகாரிகள் உட்பட—பகல் உணவு அருந்தாமல் உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்தனர். மாலை 5-15 மணிக்கு, சைக்கிள் பாக்டரிக்கு அருகில் உள்ள மைதானத்தில் திரு ரா. சார்லஸ் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில், மேற்படி அதிகாரியின் செய்கையைக் கண்டித்தும், உடனே அவர், தொழிலாளர்களிடமும் மற்ற அதிகாரிகளிடமும் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும் என்றும், அப்படியில்லாவிட்டால் உடனே அவரை வேலையினின்றும் நீக்க மானேஜ்மெண்டார் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொண்டும் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

#### ஜோசப் நினைவு நூல் நிலையம்

சென்னை—புளியந்தோப்பு (18-வது வட்டம்) ஜோசப் நினைவு நூலக உறுப்பினர் கூட்டம் 28—8—55ல், நடைபெற்றபோது, தி மு கழக மாநில மாநாடு நிதிக்கு ரூ. 25 செப்டம்பர் திங்கள் 20-ந் தேதிக்குள். தருவதென முடிவு செய்யப்பட்டது.

# ‘குறள் வாள் ஏந்துக! கொடுமை களைந்து நன்னெறி பரப்புக!’

## மாணவர்களுக்கு இரா. நெடுஞ்செழியன் அழைப்பு

“ மாணவர் படையைப் பார்க்கும்பொழுது மனம் பரவசப்படுகிறது; பாசறையில் வீற்றிருக்கும் நீங்கள்தான் இந்நாட்டை முன்னுக்குக் கொண்டுவர வேண்டும்; திருக்குறள் கருத்துக்களை வாளாக ஏந்தி, கொடுமை களைந்து, உலக முழுவதிலும் நல்ல நெறியைப் பரப்புவதற்கு முன்வர வேண்டும்;

“ அறிவு என்பது நெருப்பைப் போன்றது; அதனால் நன்மையும் பெறலாம்—தீமையும் பெறலாம்; ஆனால், தீமையை விலக்கி நன்மையைப் பெறுவதுதான், உண்மையான அறிவின் இலக்கணமாகும்;

“ நாணயம் என்பது, எல்லோரும் சேர்ந்து வாழத்தான்—ஒருவர் மட்டும் வாழ அல்ல; நாணயம் இல்லாததால்தான், இந்தியாவின் வெளிநாட்டு வர்த்தகம் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது; நாணயத்தோடு மக்கள் நல்வாழ்வு பெற வழி வகுப்பதே இன்றைய மாணவர்களுடைய கடமையாகும்;

“ படித்தவர்கள்தான் ஒழுக்கம் தவறுகின்றனர்—நாணயம் தவறுகின்றனர்; படிக்காதவர்களோ, உலகத்திற்குப் பயந்து நல்ல முறையில் நடந்துகொள்ளுகிறார்கள்—என்ற நிலைமை—இருந்துவருகிறது; இந்த நிலைமையைப் போக்கி, மாணவர்கள், இந்நாட்டின் ஒழுக்கம், பண்பு ஆகியவற்றின் பிரதிபலிப்பாக வாழ்வதற்கு வழி வகுக்க வேண்டும்,”

—என்று, 23—8—55 மாலை 4-15 மணிக்கு தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், புதுக்கோட்டை அரசினர் கல்லூரி தமிழ்ப் பேரவையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

பொதுச் செயலாளர் அவர்களை வரவேற்றுப் பேசிய கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திரு. எஸ் திருநாவுக்கரசு அவர்கள், பொதுச் செயலாளர் அவர்களைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :-

“ தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முன்பு இங்கு வந்தபொழுது காவலராக இருந்தார். இப்பொழுதோ அவர் செயலாளராக இருக்கிறார். அதுமட்டுமல்ல—காவலரும் ஆவார்; இந்நாட்டைக் காக்கின்றவர் அவரேயாதலால், ‘காவலர்’ என்ற சிறப்புப் பெயர் அவருக்கு மிகப் பொருத்தமேயாகும்.

“ காவலர் என்றேன்—அவருக்குக் கோட்டை வேண்டாமா? காவலரே உங்கட்கு இந்த புதுக்கோட்டையைத் தருகிறேன்—படை வேண்டுமா? இதோ எண்ணற்ற மாணவர் பெரும் படை—அது போதாதென்றால், இதோ பின்னால், ‘தமிழர் பெரும்படை’ காத்துக்கொண்டிருக்கிறது—அதுவும் போதாதென்றால், இலங்கை மலாயா, சிங்கப்பூர், பர்மா, தென் ஆப்பிரிக்கா முதலான வெளிநாடுகளில் வாழும் தமிழர் பெரும்படையும் இருக்கிறது! தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் ஆகியவர்களிடத்திலுள்ள வீரம், தங்களிடத்திலே மிளிருகிறது. தங்களை ‘மூன்றுவது நெடுஞ்செழியனு’க் கூறுகிறேன்’ என்று குறிப்பிட்டார்.

★

‘குறள் நெறி’ என்ற தலைப்பில், பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

“ குறள் நெறியைப் பற்றி—குறள் மாண்பைப் பற்றி அறிய இன்று நாடு எழுவது கண்டு மகிழ்கிறோம். 10, 15 ஆண்டுகட்கு முன்பு இல்லாத அளவு குறள் நெறி வளர்ந்துள்ளது; யார் யாருடைய உள்ளங்களைத் தடவவில்லையோ அவர்களுடைய உள்ளங்களை எல்லாம் சென்று தடவுகிறது; எல்லோரும் திருக்குறளைப் போற்றக் காரணம் என்ன என்பதை அறியவேண்டும்.

“ அனைவரும் போற்றக் கூடிய உயர்ந்த நிலையில் உள்ளவர் திருவள்ளுவர். இறந்த காலத்துத் தலைவர்களை யெல்லாம் சேர்த்து ஒரு மாநாடு நடத்துவதாகக் கற்பனை செய்துகொண்டு பார்ப்போமேயானால், அம்மாநாட்டிற்குத் தலைவர் திருவள்ளுவராகத்தான் இருக்க முடியும்.

“ திருக்குறள் எல்லாக் காலத்திற்கும், எல்லா நாடுகளுக்கும், எல்லா மதத்தவருக்கும், எல்லாப் பருவத்தினருக்கும் பொருந்துவது.

“சில இலக்கியங்கள் ஒரு சிலருக்கு மட்டும்—குறிப்பிட்ட ஏதேனும் ஒரு இடத்தைமட்டும் பொறுத்ததாயிருக்கும். ஆனால் அவை குறைபாடு நீக்காது—நல்லது செய்யப் பயன்படாது. தாமரை மலர்பற்றி சகாரா பாலைவனத்தில் சென்று பாடினால் பயன்படுமா? எல்லா இலக்கியங்களும் எல்லாக் காலத்துக்கும் பயன்படுவதில்லை.

“ வெள்ளிய அருவி, ஆடும் மயில், அந்தி மாலை வருணனை முதலியன வாழ்விற்குப் பயன்படுவதில்லை; தென்றல் வருணனை உள்ளத்திற்கு மகிழ்ச்சியைத் தரும்; ஆனால், வாழ்விற்குப் பயன்படாது.

“ ‘கற்க கசடறக் கற்பவை
கற்றபின்
நிற்க அதற்குத் தக’

என்றார் வள்ளுவர். இது எங்கும், எப்பொழுதும் பொருந்துவது. கசடறக் கற்க : சப்பான், சீனு, அமெரிக்கா, இங்கிலாந்து, செர்மனி, பிரான்சு முதலிய எல்லா நாடுகளுக்கும் பொருந்துவது. கி. மு. மூன்றும் நூற்றுண்டு, நான்காம் நூற்றுண்டுகளுக்கும் பொருந்தும்—கி. பி. 5, 10-ம் நூற்றுண்டு, 20-ம் நூற்றுண்டுக்கும் பொருந்தும்.

“ ‘உயர்ந்தவருக்குக் கொடு; புரோகிதருக்குக் கொடு’ என்று வள்ளுவர் வரையறுத்துக் கூறவில்லை. ‘வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை’ என்று வரையறுத்துக் கூறினர். ‘யாராயிருந்தாலும் அவன் வறியவனுயிருந்தால் கொடு; யாராயிருந்தாலும் அவர் வளமற்றவராக இருந்தால்கொடு; உன்னிடத்தில் பொருள் இருக்கிறது—பொருள் ஈட்டுகின்ற அறிவு உன்னிடத்தில் இருந்ததனால் அப்பொருள் உனக்கு வந்து சேர்ந்தது; மற்றவருக்கு ஈட்டத் தெரியவில்லை; பொருள் இல்லாதவராக இருக்கின்றனர். ஆகவே அவர்களுக்குக் கொடு’ என்றுதான் வள்ளுவர் கூறியிருக்கிறார்.

“ ‘நீ கற்றவனாக இருக்கிறாய்—பிறருக்குச் சொல்லிக்கொடுக்கும் ஆற்றல் உள்ளவனாய் இருக்கிறாய்—என்றால் கல்வி அற்றவனுக்கு உன்னிடத்தில் உள்ள கல்வியைக் கொடுப்பதுதான் ஈகை’ என்றார்.

“ ஆசிரியர்கள் சிறந்த அறிவுடையவர்களாக இருக்கலாம்; ஆனால், மாணவர்களுடைய நிலையறிந்து சொல்லிக்கொடுக்கும் திறமையற்றவர்கள் அத்துறையில் புகாமலிருப்பது நல்லது. சில ஆசிரியர்களை மாணவர்கள் விரும்புகின்றனர். ‘அவர்களின் வகுப்பு போய்விடுமே’ என்று ஓடி வருகின்றனர்; சிலருடைய வகுப்பிற்குச் செல்வதேயில்லை; வகுப்பில் ஒவ்வொரு மாணவரின் தன்மையையும் நன்ருக அறிந்திருக்க வேண்டும்; யார் யாருக்கு எந்தெந்த உவமை கொடுத்து விளக்க வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்; மகிழ்ச்சியுடன் பேசிப் பழக வேண்டும்.

“ சிலர் எப்படியோ ஆசிரியராக வந்து விடுகின்றனர்; பல துறைகளையும் எதிர்பார்த்து கிடைக்காமல் போனபின், கடைசி முடிவில் இவ்வேலைக்கு வருகின்றனர்; ஆனால், நல்ல அறிவாளிகள் ஆசிரியர் துறைக்கு வர வேண்டும்; ஆசிரியர் துறை கவர்ச்சிகரமானதாக இருக்க வேண்டும்; பத்து ரூபாயில் ஒரு செல்லாத ரூபாய் இருந்தால், அதைத்தான், கடையில் சென்று பொருள் வாங்கும்போது கொடுக்கிறோம்; அவன், ‘செல்லாது; வேறு ரூபாய் கொடு’ என்றால் ‘வேறு இல்லை’ என்கிறோம்; அவன் பணத்தைத் திருப்பிக் கொடுத்து அனுப்புவானேயானால், அப்பொழுதுதான் வேறு ரூபாயை எடுத்துக் கொடுக்கிறோம்; இது போல திறமையற்ற சிலர் முக்கியமான துறைகளில் இருந்து கொண்டு நல்லவர் வர முடியாது தடுக்கின்றனர்.

“ ‘இதனை இதனால் இவன்
முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்’

என்பதற்கிணங்க, திறமையறிந்து வேலை கொடுக்க வேண்டும். இக்கருத்துக்களைக்கொண்டே ‘தோன்றிற் புகழோடு தோன்றுக’ என்று வள்ளுவர் குறிப்பிட்டிருக்கிறார்.’

## நீக்ரோ சிறுவனை சித்திரவதையால் கொலை செய்த வெள்ளையர்

### அமெரிக்காவில் தாண்டவமாடும் நிறவெறிக்கு எடுத்துக்காட்டு

சிகாகோ, செப். 3—

சிகாகோவைச் சேர்ந்த 14 வயது நீக்ரோ சிறுவன் ஒருவனை ‘மிஸிஸிப்பி’யில் வெள்ளைக்கார வெறியர்கள் சித்திரவதை செய்து கொன்றுவிட்டனராம்.

ஒரு வெள்ளை மாதைப் பார்த்து அச்சிறுவன் ‘விசில்’ அடித்ததிற்காக இவ்வாறு வதைக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

சிதைந்து கிடந்த தனது மகனின் சடலத்தை எல்லோரும் பார்க்கட்டும் என்று அவனது தாய் கூறினாராம்.

மாதா கோவிலில் வைக்கப்பட்டிருந்த அச்சிறுவனின் சடலத்தை இரண்டு நாட்களும் பல்லாயிரவர் பார்வையிட்டனர்.

இந்தக் கோரக் கொலையை ஒட்டி இரு வெள்ளையரை போலீசார் கைது செய்து காவலில் வைத்துள்ளனர்.

### இலவச வானொலிப் பெட்டி

கர்னூல், செப். 4—

கிராம மக்கள் உபயோகத்திற்கென சமூக வானொலி பெட்டிகளை இலவசமாக மத்திய சர்க்கார் தந்துதவ முன் வந்திருப்பதாகத் தெரியவருகிறது. இதுவரை இந்த பெட்டிகளுக்கான பாதிச் செலவை கிராமவாசிகள் ஏற்றுவந்தனர்.


6-9-55 செவ்வாய் ஒரு நாள் மட்டும்

சென்னை செயின்ட் மேரீஸ் மண்டபத்தில்

மாலை 6-30 மணிக்கு

அறிஞர் அண்ணா தலைமையில்

இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினர் நடிக்கும்

‘மணி மகுடம்’

நாடகம் நடைபெறும்

(கலைஞர் மு. கருணாநிதியின் புதிய நாடகம்)

நடிகர்கள் : எஸ். எஸ். இராசேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், பி. எஸ். வெங்கடாசலம், மனோரமா, குமாரி, நிர்மலா, மற்றும் பலர்

★

டிக்கட் விபரம் : ரூ. 10, 3, 2, 1

காலை 10 மணி முதல் தியேட்டரில் டிக்கெட் கொடுக்கப்படும்


## ரஷ்யா வாங்கிய பர்மா அரிசி

### வடக்கு வியட்நாம் போய்ச் சேருகிறதாம்

ரங்கூன், செப். 4—

ரஷ்யா—பர்மா ஆகிய இரு நாடுகளும் கடந்த ஜூலைத் திங்களில் மேற்கொண்ட வர்த்தக ஒப்பந்தம் ஒன்றின்படி, ரஷ்யா வாங்கிய பர்மா அரிசியை, இப்போது வட வியட்நாமிற்கு ரஷ்யா திருப்பி வருவதாகத் தெரிகிறது என்று ‘தி நேஷன்’ என்ற ஆங்கில இதழ் தெரிவிக்கிறது.

ஏற்கனவே ஹைபாங் துறைமுகத்திற்கு 9,500 டன் அரிசி சென்றுவிட்டதாகயும், இப்போது இரங்கூனிலிருந்து 5,500 டன் அரிசி ஏற்றப்படுவதாகவும், இன்னும் 5,500 டன் அரிசி ஏற்றுமதி செய்யப்படலாம் என்றும் தெரிய வருகிறது.

இந்த அரிசியை, ரஷ்யா ஹோ-சி-மின் சர்க்காருக்கு அன்பளிப்பாக வழங்குவதாகவும் அப்பத்திரிகை கூறுகிறது.

ரஷ்யா—பர்மா ஒப்பந்தப்படி, ரஷ்யப் பொருள்கள், இயந்திரங்களுக்காக பர்மா, குறைந்தது ஆண்டொன்றுக்கு 1,50,000 டன் அரிசி, ரஷ்யாவிற்கு விற்க முடியும்; மூன்றாண்டுகள் ஒப்பந்தம் நீடிக்கும்—என்றும் தெரியவருகிறது.

## 4-வது கணவரைப் பிரியும் நடிகை!

ஹாலிவுட், ஆக. 31—

நான்காவது கணவரிடமும் தொடர்ந்து நீடித்து வாழ முடியாத ஒரு நிலை பிரபல ஹாலிவுட் நடிகையான ரீடா ஹேவொர்த் என்ற பெண்மணிக்கு ஏற்பட்டிருக்கிறது

ஆகாகானின் புதல்வரான அலிகான் இளவரசரை இந்த நட்சத்திரம் மூன்றும் கணவராகப் பெற்றிருந்து மணவிலக்கு செய்து கொண்டார்; பின்னர், நான்காவது கணவராக டிக் ஹேம்ஸ் என்பாரை ஏற்றுக் கொண்டிருந்த இவருக்கு இப்போது அவரிடமிருந்தும் பிரிந்துவிட வேண்டிய அவசியம் நேர்ந்திருக்கிறது.

டிக் ஹேம்ஸ் அர்ஜெண்டைனவைச் சேர்ந்த ஒரு பாடகர்.

நான்காவது முறையாக வாழ்க்கையில் ஏற்பட்ட மணவிலக்குத் திருப்பத்தை இந்த நடிகையின் உள்ளத்தால் தாங்கிக் கொள்ள முடியவில்லையாம்; அதிர்ச்சியுற்றிருக்கிற இவர் படுத்த படுக்கையிலேயே நீண்ட நாள் ஓய்வெடுக்க வேண்டுமென இவரது டாக்டர் கூறியிருப்பதாக இவரது வழக்கறிஞர் தெரிவித்திருக்கிறார்.

சினிமாவில் நடிப்பது பற்றிய ஒப்பந்தம் ஒன்றை இவர் மீறியதற்காக இவர்மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது; அந்த வழக்கின்போது நீதிமன்றத்திற்கு அவர் வரமுடியாத நிலையை விளக்கிய வழக்கறிஞர் இந்த ‘சோகத் தகவலை’த் தந்தாராம்!

## முன்னாள் மன்னரின் ‘மூன்றும் காதலி’ ?

லண்டன், செப். 1—

இருமுறை திருமணம் புரிந்து கொண்ட பரோடா முன்னாள் மன்னர் இப்போது, ‘ஹாலிவுட்’ நடிகையும், ஒரு பற்பசைக் ‘கம்பெனி’யின் விளம்பர அழகியுமான வர்ஜீனியா லீலி என்பவர் மீது மூன்றும் முறையாகக் ‘காதல்’ கொண்டிருக்கிறாராம்!

நியூஜெர்சி அருகில் உள்ள ஒரு கால்வாய் தீவில் இருவரும் உல்லாசமாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனராம்.

‘ எனக்கு இன்பம் தருகிறாள்’ என்று முன்னாள் மன்னரும், ‘மன்னருக்கு இன்னும் மணவிலக்குக் கிடைக்கவில்லை—நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள்—எங்கள் ‘காதல்’ இன்னும் கனியவில்லை’ என்று லீலியும் தெரிவித்திருக்கின்றனராம்.

பரோடா இராணியான சீதா தேவியை விட்டு முன்னாள் மன்னர் தனித்து வாழ்ந்தபோதிலும், இன்னும் மண விலக்குக் கிடைக்கவில்லை என்பது குறிப்பிடத் தகுந்தது.

### மாதாந்திரக் கூட்டம்

6—9—55 மாலை 2-30 மணிக்கு சென்னை-பெத்துநாய்க்கன் பேட்டை, எண் 15, முத்துகிருஷ்ணன் தெருவில், தாய்மார் கழக மாதாந்திரக் கூட்டம், திரு மயிலை சிவமுத்து தலைமையில் நடைபெறும். திருமதிகள் வ. பா. தாமரைக்கண்ணி, பார்வதி, சாரதாம்பாள், அனுசூயா மோகனசுந்தரம் ஆகியோர் பேசுவர்.

### சொற் பயிற்சிக் கூட்டம்

7—9—55 மாலை 7½ மணிக்கு, சென்னை-வண்ணை, எண் 19-ஏ, வேலாயுத பாண்டியன் தெருவில் (மாடியில்), தோழர் மதிவாணன் தலைமையில், ‘நம் நாட்டுப் பிரிவினை’ என்னும் பொருள் பற்றி சென்னை 3-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர் பலர் பேசுவர்.

### பாராட்டுக் கூட்டம்

7—9—55 மாலை 5½ மணிக்கு, திருச்செந்தூர் பக்கம் காயாமொழி கடைத்தெரு, பணமகன் இல்லத்தில், 5—9—55 அன்று, காயல் பட்டினத்தில் நடைபெறும் தோழர் அ. ம. சாகுல் ஹமீது—தோழியர் மு. க. புகாரி பேகம் திருமணத்தை ஒட்டி, தோழர் எஸ் எஸ். சிவசூரியன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எம். எஸ் சிவசாமி, சாலைக்கபீர், எஸ். ஈ. எம். தம்பி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.